**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அசல் வழக்கு எண்.100/2023 நாள்– 10.06.2026

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.சு.தனபாக்கியம், Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– கெங்காதேவி(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 25.04.2023 – வாதியின் கணவர் பெயரில் உள்ள பட்டா.1350 – கணினி நகல் – **வா.சா.ஆ.1**

2) 10.01.2007 – வாதியின் மகன் சூரிய பிரகாஷின் பிறப்புச் சான்றிதழ் – நகல் – **வா.சா.ஆ.2** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

3) 05.08.2022 – வாதியின் குழந்தை சுபலட்சுமியின் பிறப்புச் சான்றிதழ் – நகல் – **வா.சா.ஆ.3** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

**(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)**